தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

24.08.2013

**செம்மை கரும்பு சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக லாபம் அடையலாம்'**

செம்மை கரும்பு சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என விவசாயிகளுக்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் வேண்டுகோள் விடுத்தார்.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் பேசியது:

இம்மாவட்டத்தில் நெற்பயிரை போலவே கரும்பு பயிரிலும் செம்மை கரும்பு சாகுபடி முறையை வேளாண் துறையினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். விவசாயிகள் அந்த முறையை தங்களது நிலத்தில் பயன்படுத்தி அதிக லாபம் அடைய வேண்டும்.

இம்மாவட்டத்தில் ஏரி வரத்துக் கால்வாயில் தண்ணீர் வரும் பொருட்டு அதற்கு தகுதியான கால்வாயை வெட்டி விவசாயிகள் பயன்பெறும் வகையில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

திருத்தணி பூ மார்க்கெட்டில் கைத்தராசு பயன் படுத்துவதி பூ விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதாக பல மாதங்களாக புகார்கள் வந்துள்ளன. ஆனால் அலுவலர்கள் இதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இப்பிரச்னையை திருத்தணி கோட்டாச்சியர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் விற்பனைத்துறை அலுவலர் ஆகியோர் இணைந்து கண்காணிக்க வேண்டும்.

தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் கால்நடைகளுக்கான பவுண்டரி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வமணி, வேளாண்மை இணை இயக்குநர் என். சுந்தர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கோ. சுப்பிரமணியன், திருத்தணி கோட்டாட்சியர் கலைவாணி, அம்பத்தூர் கோட்டாச்சியர் மாரிமுத்து, பொன்னேரி கோட்டாட்சியர் பார்த்திபன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**கூடுதல் விலைக்கு பல்லாரி விதை: விவசாயி புகார்**

தோட்டக்கலைத் துறை அலுவலகம் மூலம் விற்பனை செய்யப்படும் பல்லாரி வெங்காய விதை, கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக, குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயி புகார் தெரிவித்தார்.

ஒட்டன்சத்திரம் நாகனம்பட்டியைச் சேர்ந்தவர் ம. நல்லசாமி. விவசாயியான இவர் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று, மாவட்ட ஆட்சியர், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஆகியோரிடம் பல்லாரி வெங்காய விதை கூடுதல் விலைக்கு விற்கப்படுவது குறித்து புகார் அளித்தார். அப்போது அவர் தெரிவித்தது:

பல்லாரி வெங்காயம் பயிரிடுவதற்கான விதைகள் ஒட்டன்சத்திரம் தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ எடை கொண்ட விதைகள் ரூ. 500-க்கு விற்பனை செய்கிறார்கள். விதை பையில் அச்சிடப்பட்டுள்ள உண்மையான விலைப் பட்டியலை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்துள்ளனர்.

அந்த ஸ்டிக்கரின் மேல் எடை அளவு மற்றும் காலாவதியாகும் தேதி உள்ளிட்ட விவரங்கள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. விலை குறித்து எவ்வித தகவலும் இல்லாததால், விற்பனையாளர்கள் சொல்வதே விலையாக உள்ளது.

ஆனால், அந்த ஸ்டிக்கரை கிழித்து பார்த்தால், 1 கிலோ விதையின் விலை ரூ. 240 என அச்சிடப்பட்டுள்ளது. அதில், 50 சதவீத மானியம் என்றால் ரூ. 120-க்கு

மட்டுமே ஒரு கிலோ விதை விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால், விலைப்பட்டியல் மறைக்கப்பட்டுள்ளதால் ரூ. 250 கொடுத்து வாங்கி வருகிறோம்.

விதையின் உண்மையான விலையினை அதிகாரிகள் தெளிவுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இது குறித்து, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் த. சந்திரசேகரனிடம் கேட்டபோது, விலைப் பட்டியலில் முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

அதனடிப்படையில், சென்னையில் உள்ள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ரூ. 240 என்பது பழைய விலை என்றும், விலைப் பட்டியல் திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் ஒரு கிலோ ரூ. 500-க்கு விற்பனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதகாவும் தெரிவித்தனர். எனவே, இனிமேல் விற்பனைக்கு வரும் விதை பாக்கெட்டுகளில் விலை விவரம் அச்சிடப்படும் என்றார்.

**காய்கறி, பழங்கள் கொள்முதல் மையங்கள்**

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், உற்பத்தி செய்யப்படும் காய்கறி மற்றும் பழங்களை கொள்முதல் செய்ய முதல்கட்டமாக 4 ஒன்றியங்களில் சேமிப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கே. மனோகரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் அ. மனோகரன் மாவட்டத்தில் பெய்துள்ள மழை அளவு குறித்த புள்ளி விவரங்களை வாசித்தார். அப்போது, குறுக்கிட்டு பேசிய விவசாயிகள், ஒரு இடத்தில் கூட மழை பெய்யாத நிலையில் தவறான புள்ளி விவரங்களை தெரிவிக்கக் கூடாது என கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதற்கு பதிலளித்த அவர், அடுத்த கூட்டம் முதல் மழை பெய்த இடங்களை குறிப்பிட்டு சொல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கடந்த 2 ஆண்டுகளாக மழை இல்லாததால், நிலக்கோட்டை, வெள்ளோடு உள்ளிட்ட பகுதிகளில் பூச்செடிகள் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கும், சிறுமலைப் பகுதியில் எலுமிச்சை, பழனி பகுதியில் மாமரங்கள் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வறட்சி பாதித்த பகுதிகளில் கணக்கெடுப்பு நடத்தும்போது, பூச்செடிகள், மா, எலுமிச்சை உள்ளிட்ட அனைத்து சாகுபடி நிலங்களும் கணக்கீடு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள், காப்பீடு செய்த பணம் விரைவில் கிடைப்பதற்கு, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது வங்கி கடன்களை திருப்பி வழங்குவதற்கு கால நீட்டிப்பு வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு பதிலளித்து மாவட்ட ஆட்சியர் பேசியது: தேசிய காப்பீட்டு நிறுவனம் மூலம் தமிழகத்துக்கு ரூ. 310 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படும். மேலும், வறட்சி பாதித்த அனைத்து இடங்களிலும் தற்போது கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இது குறித்து, அந்தந்தப் பகுதி விவசாயிகள், கிராம நிர்வாக அதிகாரிகளிடம் சென்று தங்களின் நிலம் அடங்கலில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

கணக்கெடுப்பு முடிந்த பின்னர், ஏதாவது நிலங்கள் விடுபட்டுள்ளது என புகார் அளித்தால், மாவட்ட நிர்வாகம் பொறுப்பேற்காது. மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கும் அன்னவாரிச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

உற்பத்தி செய்யப்படும் காய்கறி மற்றும் பழங்களை கொள்முதல் செய்வதற்கு சென்னை, கோவை உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கூட்டுறவு

மையங்களைப்போல், திண்டுக்கல்லில் ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் கேட்டனர்.

அதற்கு பதிலளித்த தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் த. சந்திரகேரன், கூட்டுறவுத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை இணைந்து பரிச்சார்த்த முறையில் ரெட்டியார்சத்திரம், வடமதுரை, தொப்பம்பட்டி, ஆத்தூர் ஆகிய 4 ஒன்றியங்களில் காய்கறி கொள்முதல் மையங்களை விரைவில் தொடங்க உள்ளன. இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் இணைந்து உற்பத்திப் பொருள்களை இந்த கொள்முதல் மையங்களில் விற்பனை செய்ய முன்வர வேண்டும் என்றார்.

கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் செல்வக்குமரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மைத் துறை) கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**இயற்கை விவசாய கருத்தரங்கம்**

சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்கினிக் கல்லூரியில், சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு முதல்வர் எம்.நந்தகுமார் தலைமை வகித்தார். ஒண்டிப்புலிநாயக்கனூர் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.சுப்புலட்சுமி முன்னிலை வகித்தார். விருதுநகர் மாவட்ட இயற்கை முறை விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.சிவகுமார், சிறப்புரையாற்றினார்.

அவர் கூறியது:

தற்போது இயற்கை முறை விவசாயம் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதால், அதில் விளையும் பொருள்களில் நஞ்சு கலந்துவிடும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இயற்கை உரம், மண் புழு உரம், மாட்டுச்சாணம் உள்ளிட்டவைகளை பயன்படுத்தினால், அதன்மூலம் விளையும் பொருள்களால், மனிதர்களுக்கு பாதிப்பு இருக்காது. எனவே விவசாயிகள் அனைவரும் இயற்கை முறை விவசாயம் செய்ய வேண்டும் என்றார்.

இதில் மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்பாளர் சீனிசங்கர் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு!**

பவானிசாகர் அணையில் இருந்து முதல் பருவ நன்செய் சாகுபடி பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

சத்தியமங்கலத்தை அடுத்த பவானிசாகர் அணை மூலமாக 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் கீழ்பவானி பாசன நிலங்கள் பயன்பெறுகின்றன. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல் டிசம்பர் 15 வரை 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் நன்செய் பாசனத்துக்காக 24 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடப்படும்.

ஜனவரி 5-ஆம் தேதி முதல் ஏப்ரல் 30 வரை புன்செய் பயிரான கடலை, எள் சாகுபடிக்கு 12 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். இதன் மூலமாக 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும். 2013-2014 ஆம் பாசன ஆண்டில் ஆகஸ்ட் 23-இல் முதல் பருவ நன்செய் ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவிட்டது.

அதன்படி, பவானிசாகர் அணையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயில் தண்ணீர் திறப்பு விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம் பொத்தானை அழுத்தி மதகை திறந்து வைத்தார்.

இதில் வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், போக்குவரத்துத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆர்.என்.கிட்டுசாமி (மொடக்குறிச்சி), பி.ஜி.நாராயணன் (பவானி), ஈரோடு மாநகர மேயர் மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிச்சாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வி.ஏ.பழனிச்சாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அப்போது, கால்வாயில் சீறிப்பாய்ந்து வந்த தண்ணீரில் மலர்களை தூவி விவசாயிகள் வரவேற்றனர். முதல் கட்டமாக விநாடிக்கு 500 கன அடி நீர் திறந்துவிடப்பட்டு, பின்னர் படிப்படியாக வெள்ளிக்கிழமை மாலை 2000 கன அடி நீராக வெளியேற்றப்படும். வெள்ளிக்கிழமை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 85 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1400 கன அடியாகவும் உள்ளது.

அணையில் இருந்து நன்செய் பாசனத்துக்காக டிசம்பர் 15-ஆம் தேதி வரை தண்ணீர் திறப்பு நீடிக்கும். இதன் மூலமாக சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி, ஈரோடு, பெருந்துறை, காங்கயம், அரவக்குறிச்சி உள்ளிட்ட 7 வட்டங்களில் 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும்.

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி பாசனம் செய்து அதிக பயன்பெற வேண்டுமென ஆட்சியர் வே.க.சண்முகம் கேட்டுக்கொண்டார்.

**பவானிசாகர் அணைநீர்மட்டம் 85 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,404 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 500 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 18.2 டி.எம்.சி,

**விவசாயக் குழுக்களுக்கு 132 ஆடுகள்**

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் வேளாண் துறையினர் சார்பில் விவசாயக் குழுக்களுக்கு ரூ.1.10 லட்சம் மதிப்புள்ள 132 ஆடுகள் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

திருமங்கலம் வேளாண் துறை சார்பாக ஒருங்கிணைந்த பண்ணை மையம் மற்றும் விவசாயக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விவசாயம்

இல்லாத வறட்சியில்லாத நாள்களில் பண்ணைக்குட்டை அமைத்திடவும், ஆடு, கோழி, பசு மாடு வழங்கவும் வங்கிகளின் மூலமாக கடனுதவி பெறவும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பின்னர், ஒரு குழுவுக்கு 10 பெண் ஆடுகள் மற்றும் 1 ஆண் ஆடு என அனைத்து குழுக்களுக்கும் சேர்த்து 132 ஆடுகள் வழங்கப்பட்டன. வேளாண் துறையினர் ஆடுகளுக்கான கடனுதவியில் 50 சதவிகிதம் மானியம் வழங்குகின்றனர் என வேளாண் துறை இணை இயக்குநர் இளங்கோவன் தெரிவித்தார்.

**பயிர் காப்பீடு மறுப்பு: அதிகாரிகள் மீது விவசாயிகள் குற்றச்சாட்டு**

தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு கிடைக்காமல் போனதற்கு அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என குறைகேட்பு கூட்டத்தில் குற்றம்சாட்டப்பட்டது.

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகள்:

குள்ளஞ்சாவடி பிர்காவில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மிகவும் குறைவாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பலருக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

கரும்பு பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.6,500 மட்டுமே காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நெல்லிக்குப்பம் பகுதியில் கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.65,000 வரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அதிகாரிகளின் அலட்சியப் போக்கே காரணமாகும்.

எனவே இது குறித்து உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை முழுமையாக கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தானே புயலால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கு காப்பீட்டு தொகை கிடைக்கவில்லை. காடாம்புலியூர் பகுதியில் வாழை விவசாயிகள், ரூ.2.50 லட்சம் காப்பீட்டு பிரிமியம் செலுத்தியுள்ளனர்.

இங்கு தானே புயலால் 1,500 ஹெக்டேருக்கும் மேற்பட்ட இடத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழைகள் முழுமையாக பாதிக்கப்பட்டன.

ஆனால் 150 விவசாயிகளுக்கான காப்பீட்டுத் தொகையாக ரூ.1,120-ஐ அங்குள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு காப்பீட்டு நிறுவனம் அளித்துள்ளது.

இந்த தொகையை 150 விவசாயிகள் எப்படி பிரித்துக் கொள்ள முடியும்?

இந்த மோசமான சூழ்நிலைக்கு வேளாண், தோட்டக்கலை, வருவாய் மற்றும் புள்ளியியல் துறை அதிகாரிகளே காரணம்.

ஆட்சியர்: கரும்பு சாகுபடி குறித்து காப்பீட்டு நிறுவனம் அளித்துள்ள அறிக்கைக்கும், ஆலை தரப்பில் தெரிவிக்கப்பட்ட அறிக்கைக்கும் பெரிய அளவில் வித்தியாசம் உள்ளது.

இதனால் தானே புயலால் பாதிக்கப்பட்ட கரும்பு, வாழை விவசாயிகளுக்கு முழுமையான காப்பீட்டுத் தொகை கிடைத்திட வேளாண், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் பயிர்காப்பீடு செய்துள்ள விவசாயிகள், பயிர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிந்தால், சம்பந்தப்பட்ட வேளாண் அதிகாரிகள் முன்னிலையிலேயே அறுவடைப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இது போல், கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

**கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தமிழக அரசு முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு கோழி வளர்ப்புக் கூலியாக, கிலோவுக்கு ரூ.16 வழங்க வேண்டும்.

ஆண்டுக்கொரு முறை, ஒரு கோழி வளர்ப்பதற்காக ரூ.5 போனஸ் வழங்க வேண்டும்.

கோழிப்பண்ணை விவசாயிகளுக்கான கூலி உயர்வை ஆண்டுக்கொரு முறை முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோழி வளர்ப்போர் சங்கத்தினர் கடந்த 16-ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

ஆனால் இதுவரை, கோழிக்குஞ்சு நிறுவனங்கள் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

இதனைத் தொடர்ந்து, முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசே ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை மாலை கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.கமலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவரும், எம்.எல்.ஏ.வுமான கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜி.லதா, பொறுப்பாளர்கள் ஆர்.குலசேகரன், எல்.மணி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**ரப்பர் விவசாயிகளைப் பாதுகாக்க கோரிக்கை**

தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்து ரப்பர் விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதிப்பிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ரப்பர் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

குமரி மாவட்டம் ரப்பர் விவசாயிகள் சங்கம் மற்றும் புலிகள் சரணாலய எதிர்ப்பு இயக்கக் கூட்டம் திற்பரப்பு பேரூராட்சி அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு ரப்பர் விவசாயிகள் சங்கத் தலைவர் வழக்குரைஞர் எஸ். நெல்சன் தலைமை வகித்தார்.

செயலர் சி. பாலசந்திரன், நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், கேசவன்குட்டி, நுகர்வோர் பாதுகாப்பு சங்கச் செயலர் டி. கோபாலகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் ஏ. அகஸ்டின், லூயிசன், குலசேகரம் பேரூராட்சித் தலைவர் ராதாதங்ராஜ், பொன்மனை பேரூராட்சித் தலைவர் பிரசன்னகுமாரி, திருவட்டாறு பேரூராட்சித் தலைவர் சுந்தர்ராஜ், கோதநல்லூர் பேரூராட்சித் தலைவர் கிறிஸ்டல் பிரேமகுமாரி, குமாரபுரம் பேரூராட்சித் தலைவர் அனிதா ஜெங்கின்ஸ். அயக்கோடு ஊராட்சித் தலைவி தங்கரமணி, திருவட்டாறு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் சுதாபாய், புலிகள் சரணாலய எதிர்ப்பு இயக்கத் தலைவர் ரவி, கல்குளம் வட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் வர்கீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் தனியார் காடுகள் சட்டத்தை உடனே ரத்து செய்து குமரி மாவட்ட ரப்பர் விவசாயிகளையும், ரப்பர் விவசாயத்தையும் பாதிப்பிலிருந்து மீட்க வேண்டும். தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை ஆராய்வது தொடர்பாக அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு அறிக்கையை வெளியிட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புலிகள் சரணாலயம் அமைக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட அனைத்து பகுதி உள்ளாட்சி அமைப்புகளும் மன்றக் கூட்டத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**விற்பனையாளர்கள் விதைச்சட்டப்படி விதைநெல் விற்க அறிவுறுத்தல்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விதைநெல் விற்பனையாளர்கள் விதைச்சட்டப்படியே விதைநெல் விற்க வேண்டுமென தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் கோவை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் அறிவுரைப்படி மதுரை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் கா. ஸ்ரீதர் தலைமையில் தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் மற்றும் விதை ஆய்வாளர்கள் அடங்கிய குழுவினர் அண்மையில் விற்பனை நிலையங்களை ஆய்வு மேற்கொண்டனர்.

இதுகுறித்து தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் கூறியது:

விவசாயிகள் தனியார் விற்பனை நிலையங்களில் விதைநெல் வாங்கும்போது உரிய பணப்பட்டியலில் நெல், விதையின் பெயர், ரகம், அளவு, குவியல், எண், காலாவதி நாள் ஆகிய விவரங்கள் இருக்க வேண்டும்.

உற்பத்தியாளர் விவர அட்டை இல்லாமல், சான்று அட்டை இல்லாமல், எக்காரணம் கொண்டும் விதைகளை வாங்க வேண்டாம்.

இதேபோல், விதை விற்பனையாளர்கள் மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும்.

வெளி மாநிலங்களில் இருந்து பெறப்படும் சான்று பெற்ற விதைகளுக்கு கொள்முதல் பட்டியலுடன் அந்த மாநில விதைச் சான்று நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு விதைக் குவியலுக்கும் (படிவம் 2) பெறப்பட வேண்டும்.

அவ்வாறு படிவம் படிவம் 2 மற்றும் விதைச்சட்டத்தின்படி அனைத்து விவரங்களும் இல்லாமல் பெறப்படுகின்ற எந்த விதைக் குவியலையும் வாங்கக் கூடாது.

அவ்வாறு படிவம் -2 இன்றி விதைகள் பெற்று இருப்பு வைத்து விநியோகம் செய்யும்பட்சத்தில் விதை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, மேற்கண்ட விதைகளை விற்பனை செய்ய தடை விதிப்பதுடன் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது விதைச்சட்டப்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 117.60 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 117.60 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 8,019 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 15,005 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரியில் 3,000 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 2,501 கன அடி வீதமும், கல்லணை கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 304 கன அடி வீதமும் தண்ணீர்

திறந்துவிடப்படுகிறது.

**சான்று பெற்ற விதைநெல் விற்க அறிவுறுத்தல்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விதைநெல் விற்பனையாளர்கள் விதைச்சட்டப்படியே விதைநெல் விற்க வேண்டுமென தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் கோவை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் அறிவுரைப்படி மதுரை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் கா. ஸ்ரீதர் தலைமையில் தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் மற்றும் விதை ஆய்வாளர்கள் அடங்கிய குழுவினர் அண்மையில் விற்பனை நிலையங்களை ஆய்வு மேற்கொண்டனர்.

இதுகுறித்து தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குநர் மனோகரன் கூறியது:

விவசாயிகள் தனியார் விற்பனை நிலையங்களில் விதைநெல் வாங்கும்போது உரிய பணப்பட்டியலில் நெல், விதையின் பெயர், ரகம், அளவு, குவியல், எண், காலாவதி நாள் ஆகிய விவரங்கள் இருக்க வேண்டும்.

உற்பத்தியாளர் விவர அட்டை இல்லாமல், சான்று அட்டை இல்லாமல், எக்காரணம் கொண்டும் விதைகளை வாங்க வேண்டாம்.

இதேபோல், விதை விற்பனையாளர்கள் மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும்.

வெளி மாநிலங்களில் இருந்து பெறப்படும் சான்று பெற்ற விதைகளுக்கு கொள்முதல் பட்டியலுடன் அந்த மாநில விதைச் சான்று நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு விதைக் குவியலுக்கும் (படிவம் 2) பெறப்பட வேண்டும்.

அவ்வாறு படிவம் படிவம் 2 மற்றும் விதைச்சட்டத்தின்படி அனைத்து விவரங்களும் இல்லாமல் பெறப்படுகின்ற எந்த விதைக் குவியலையும் வாங்கக் கூடாது.

அவ்வாறு படிவம் -2 இன்றி விதைகள் பெற்று இருப்பு வைத்து விநியோகம் செய்யும்பட்சத்தில் விதை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, மேற்கண்ட விதைகளை விற்பனை செய்ய தடை விதிப்பதுடன் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது விதைச்சட்டப்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றார்.

**புதுகை மாவட்டத்தில் 90 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி இலக்கு**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 90 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை அறிவித்துள்ளது.

இது குறித்து மாவட்ட வேளாண்துணை இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி பாசன கல்லணை கால்வாய் பகுதியில் 11,200 ஹெக்டேர் மற்றும், இதர பகுதியில் 78,200 ஹெக்டேர் பரப்பளவு உள்பட மொத்தம் 90 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சம்பா சாகுபடிக்கு தேவையான சி.ஆர்- 1009, பிபிடி- 5204, ஏடிடி- 39, கோ(ஆர்)- 50 மற்றும் மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி

ஆகிய ரகங்களின் சான்று பெற்ற விதைகள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் 51 மெட்ரிக் டன்கள் இதுவரை வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வேளாண் விரிவாக்க மையங்களில் 674 மெட்ரிக் டன் விதைகளும், தனியார் விதை விற்பனை நிலையங்களில் 814 மெட்ரிக் டன் விதைகளும் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் 269 மெட்ரிக் டன் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

வேளாண் விரிவாக்க மையம், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் ஒரு கிலோ விதைக்கு ரூ. 5 மானியமும் வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் போராட்டம்**

வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி கலசப்பாக்கத்தில் விவசாயிகள் நூதனப் போராட்டத்தில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

கலசப்பாக்கம் ஆற்றுப்பாலம் அருகே தமிழக உழவர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் நடந்த இப்போராட்டம், மாவட்டத் தலைவர் வி.ஜி.புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் தற்போது நிலவி வரும் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு சாகுபடி இல்லாமல் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம் என்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு நிவாரணம் வழங்க காலம் கடத்துகிறார்கள். எனவே காலம் தாழ்த்தாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உடனே நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி காய்ந்த நெல் பயிர்களையும், கரும்பு சோகைகளையும் பாடைகட்டி ஊர்வலமாகச் சென்று ஆற்றுப் பாலத்தின்கீழ் மணலில் போட்டு ஈமச்சடங்கு செய்து நூதனப் போராட்டம் நடத்தினர்.

இதில் விண்ணுவாம்பட்டு கே.சிவலிங்கம்,ஆனைவாடி எம்.பாலசுப்பிரமணி,சிறுவள்ளூர் டி.கணேசன்,எம்.கோவிந்தசாமி உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.08.2013**

## நேரடி கொள்முதல் மையம் திறக்க அரசு முடிவு

திண்டுக்கல் : விலை உயர்வினை கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.காய்கறியிலிருந்து அனைத்து பொருட்களின் விலை உயர்வினால் ஒட்டுமொத்த நுகர்வோர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளிடமிருந்து நேரடியாக காய்கறிகளை கொள்முதல் செய்யும் மையங்கள் சென்னையில் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன. இதேப்போன்ற மையங்களை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.இதற்காக வேளாண் உற்பத்தி ஆணையர் சத்திய பிரதா சாகுல் அனைத்து மாவட்டங்களிலும் சென்று அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். திண்டுக்கல்லில் நேற்று வேளாண் மற்றும் தோட்டக்கலை மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார். மாவட்டத்தில் உள்ள ஒட்டன்சத்திரம், வடமதுரை, தொப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் நேரடி கொள்முதல் மையங்களை திறக்குமாறு அறிவுறுத்தினார்.

## கோகோ விலை கிலோ ரூ.160 சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வம்

தேனி : மாவட்டத்தில், கோகோ ஒரு கிலோ 160 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருவதால், இதனை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில், தற்போது 600 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு விவசாயத்துறை தொழில்நுட்ப உதவிகளையும், மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது. விவசாயிகளிடம்

கோகோ கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், மூன்றாண்டு சர்வதேச விலை சராசரி, இந்திய மார்க்கெட் விலை சராசரி, இதில் எது அதிகமோ, அந்த விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும், என ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இந்த ஒப்பந்தப்படி, நடப்பு ஆண்டில் விவசாயிகளிடம் இருந்து சர்வதேச நிறுவனங்கள் ஒரு கிலோ கோகோ 64 ரூபாய்க்கு கொள்முதல் செய்தாலே போதும். ஆனால், தற்போது மார்க்கெட்டில் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ 160 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.இந்த விலை உயர்வு காரணமாக விவசாயிகள் அதிக பரப்பில் கோகோ சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மாவட்டத்தில் 1,985 குளங்கள் வறண்டன 1.13 லட்சம் எக்டேர் சாகுபடி குறைவு

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் 1,985 குளங்கள் முற்றிலும் வறண்டு காணப்படுகிறது. மாவட்டத்தில் 1.13 லட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி குறைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டு இயல்பான மழை அளவை விட 7 சதவீதம் குறைவான மழை பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு இம்மாதம் 287.8 மி.மீ இயல்பான மழையாகும். ஆனால் இதுவரை 321.94 மி.மீ மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவை விட 12 சதவீதம் கூடுதலாகும். மாவட்டத்தில் அணைக் கட்டுகளின் மொத்த கொள்ளளவு 13 ஆயிரத்து 765 மி.க.அடியாகும். இதில் தற்போது 6,661 மி.க.அடி நீர் உள்ளது. கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் 1,436 மி.க.அடி நீர் இருந்தது. தற்போது அணைகளில் 50 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 11 சதவீதம் நீர் இருப்பு இருந்தது. மாவட்டத்தில் மொத்தம் 2,449 குளங்களில் 1,985 குளங்கள் முற்றிலும் வறண்டு காணப்படுகிறது. 149 குளங்களில் ஒரு மாதத்திற்கும், 315 குளங்களில் 2 மாதங்களுக்கும் தண்ணீர் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிணறுகளில் சராசரியாக 1 முதல் 4 மணி நேரம் பாசனம் மேற்கொள்ளும் அளவுக்கு நீர் உள்ளது. மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 1.35 லட்சம் எக்டேர் பரப்பில் பல்வேறு பயிர்கள்

சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 22 ஆயிரத்து 447 எக்டேர் பரப்பில் இதுவரை சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 12 ஆயிரத்து 959 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வேளாண்மைத்துறையில் தமிழக முதல்வர் இரண்டாம் பசுமைப்புரட்சி

தூத்துக்குடி : வேளாண்மை வளர்ச்சியில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த தமிழக முதல்வர் ஜெ.,
வேளாண்மை திட்டங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு நேரடியாக சென்றடையும் வகையில் விவசாயிகளின் முழு விபரம் இணையதளத்தில் தனி வெப்சைட்டில் ஏற்ற உத்தரவிட்டுள்ளார். தூத்துக்குடி மாவட்டத்தில் இதற்கான பணிகள் நடந்து வரும் நிலையில் இன்று அனைத்து வட்டாரங்களிலும் சிறப்பு முகாம் நடக்கிறது. இதில் விவசாயிகள் ஆர்வமாக பங்கேற்குமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.
இன்றைக்கு எல்லாம் கம்ப்யூட்டர் மயமாகி வருவதால் விவசாயிகளின் விபரங்கள் அனைத்தையும் அந்தந்த மாவட்டங்களில் வேளாண்மைத்துறை கணக்கெடுத்து இணையதளத்தில் தனி வெப்சைட்டில் ஏற்றி வைக்க அரசு உத்தரவிட்டது.
இது சம்பந்தமாக தூத்துக்குடி மாவட்டத்தில் கலெக்டர் ரவிக்குமார் ஆலோசனையின் பேரில்
வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் தலைமையில் வேளாண்மை அதிகாரிகள் மதியழகன், குருமூர்த்தி, கருப்பசாமி மற்றும் வேளாண்மை அதிகாரிகளை கொண்ட குழுவினர் மாவட்டம் முழுவதும்
சென்று விவசாயிகளின் விபரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.விவசாயிகளுக்கு அரசு வழங்க கூடிய அனைத்து திட்டங்களும் நேரடியாக அவர்களுக்கு செல்லும் வகையில் விவசாயிகளின் பொது தகவலை இணையதளத்தில் ( தனி வெப்சைட்டில் ) பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் இதற்கான பணிகள் துவங்கி நடந்து வருகிறது.
இம்மாவட்டத்தில் மொத்தம் ஒரு லட்சத்து 97 ஆயிரம் விவசாயிகள் இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஒரு லட்சம் விவசாயிகளின் அனைத்து விபரங்களும் வெப்சைட்டில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் மதியழகன் தெரிவித்தார்.
இன்று தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும்

விவசாயிகளின் விபரம் சேகரிக்கும்

சிறப்பு முகாம் நடக்கிறது. வேளாண்மைத்துறை அலுவலர்கள், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டாமாண்டு படிக்கும் 100 மாணவ, மாணவிகள் இதற்கான பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இம்மாவட்டத்தில் மொத்தம் உள்ள 12 வட்டாரங்களில் பத்து வட்டாரங்களில் பல்கலைக்கழக மாணவ, மாணவிகளும், இரண்டு வட்டாரங்களில் வேளாண்மைத்துறை அலுவலர்களும் தகவல் சேகரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இந்த கணக்கெடுப்பு பணியில் விவசாயிகள் ஆர்வமாக பங்கேற்க வேண்டும் என்று உதவி இயக்குனர் மதியழகன் அழைப்பு விடுத்துள்ளார்.

விவசாயிகளின் பெயர், தந்தை பெயர், முகவரி, வயது, கல்வித்தகுதி, மொபைல் நம்பர் அல்லது டெலிபோன் எண், பாங்க் கணக்கு விபரம், சிறு மற்றும் குறு விவசாயி விபரம், எந்த வகுப்பை சேர்ந்தவர் உள்ளிட்ட விபரம் முதலில் விவசாயிகளிடம் கேட்டு பதிவு செய்யப்படுகிறது.

அதற்கு அடுத்ததாக அவர்கள் விவசாயம் செய்யும் நிலத்தின் பரப்பு, சர்வே எண், நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா, சொந்த விவசாயமா, குத்தகை விவசாயமா என்கிற விபரம் எடுக்கப்படுகிறது. பின்னர் அவர்களது நிலத்தின் மண் மாதிரி எடுக்கப்படுகிறது. இதற்காக விவசாயிகளிடம் 20 ரூபாய் கட்டணம் பெறப்படுகிறது.

மண் மாதிரி சோதனை செய்யப்பட்டு அந்த நிலத்தின் உரத்தன்மை குறிப்பாக தளைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து மற்றும் நுண்ணூட்ட உர அளவு விபரங்கள் கண்டறியப்பட்டு என்ன பயிர் இதில் செய்யலாம் என்கிற ஆலோசனை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இது சம்பந்தமான தகவல் முழுவதும் இணையதளத்தில் பதிவு செய்யப்படுகிறது. இது தவிர எந்த பயிருக்கு எவ்வளவு உரம் இட வேண்டும். எந்த உரச்சத்து பற்றாக்குறையாக உள்ளது போன்ற விபரங்களும் இணையதளத்தில் பதிவு செய்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது. மண்ணில் உள்ள கார, அமில தன்மையும் கண்டறியப்படுகிறது.

விவசாய பணிகள் கிணற்று பாசனம் மூலமாக நடக்கிறதா அல்லது குளத்து

பாசனம் மூலம் நடக்கிறதா என்பது போன்ற விபரங்களும், விவசாயத்தில் பண்ணை கருவிகள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. அதன் விபரங்கள் குறிப்பாக டிராக்டர், சிறிய வகை டிராக்டர், பயிர் நடும் கருவி, அறுவடை இயந்திரம், தெளிப்பான்கள், களை எடுக்கும் கருவி போன்றவற்றில் எதனை எல்லாம் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர் என்கிற விபரமும் விவசாயிகளிடம் பெற்று இணையதளத்தில் ஏற்றப்படுகிறது.

இது தவிர விவசாயிகளிடம் உள்ள கால்நடைகளான ஆடு, மாடு, கோழி போன்ற வளர்ப்பு விபரங்கள், தற்போது அவர்களது இடத்தில் பயிர் செய்துள்ள பயிர்களின் விபரம், மக‹ல் எவ்வாறு கிடைக்கிறது உள்ளிட்ட விபரங்களையும் இணையதளத்தில் பதிவு செய்யப்படுகிறது.

மேலும் அந்த நிலங்களின் மூலம் வரக் கூடிய ஆண்டு வருமானம், இது தவிர மாற்று தொழில் மூலம் வரக் கூடிய வருவாய் விபரம்,

வேறு என்ன தொழில் செய்கிறீர்கள், அதன் மூலம் கிடைக்கும் வருவாய் போன்றவற்றையும் குறிப்பிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் முழுவதையும் விவசாயிகள் முறையாக தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்த மக‹லை அதிகப்படுத்த தொழில் நுட்ப அலுவலர்கள் மூலமாக அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விபரங்களின் அடிப்படையில் தான் அரசு நலத்திட்டம் கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள

வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு விபரங்களை தெரிவிக்க வேண்டும் என்று வேளாண்மைத்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இன்னும் சில மாதங்களில் விவசாயிகளின் பொது தகவல் அனைத்தையும் கண்டறிந்து அதனை இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு விடும். இதன் மூலம் ஒவ்வொரு விவசாயிகளின் விபரம், அவர்கள் குறித்த முழு விபரத்தையும் பட்டனை தட்டியவுடன் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும், அதன் மூலம் அவர்களுக்கு உதவி

செய்து அவர்களை ஊக்குவிக்கும் வாய்ப்பும் கிடைக்கும் என்று வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### தென்னையை தாக்கும் நத்தை புழு

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி சுற்றுவட்டார பகுதியில் தென்னையை தாக்கி வரும் நத்தை புழுக்களை விவசாயிகள் உழவியல் முறை மற்றும் வேதியியல் முறைகளை கையாண்டு அழிக்கலாம்.

வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை:

போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, புலியூர், மஞ்சமேடு, பாரூர், கீழ்குப்பம், துரைப்பட்டி, பாப்பானூர், மோட்டுக்கரை , ஆட்டுகாரனூர் ஆகிய கிராமங்களில் உள்ள தென்னை மரங்களில் நத்தை புழுக்கள் எனப்படும் எரி பூச்சி தாக்குதல் தற்போது பரவலாக காணப்படுகிறது.

தமிழகத்தில் முதன் முறையாக இந்த பகுதியில் நத்தை புழுக்களின் தாக்குதல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நத்தை புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம் வெள்ளை கோடுகளுடன், நான்கு வரிசை ரோமங்களுடன் காணப்படும். இது மனித உடலில் பட்டால் அரிக்கும் தன்மை கொண்டது. இந்த புழுக்கள் தென்னை ஓலைகளை சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகப்பெரிய சேதத்தை உருவாக்கி இதன் மூலம் ஓலைகள் காய்ந்து காணப்படும்.

இதனால், பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி விளைச்சல் முழுவதும் பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்படும். இந்த புழுக்களை விவசாயிகள் விளக்கு பொறி, உழவியல் முறை மற்றும் வேதியியல் முறையில் அழிக்கலாம்.

விளக்கு பொறிகளை வைத்து தாய் அந்து பூச்சிகளை கட்டுப்படுத்த இரவு, 7 மணி முதல், 11 மணிவரை தென்னந்தோப்புகளில் ஏக்கருக்கு மூன்றிலிருந்து ஐந்து பொறிகள் வைத்து அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

இதனால், இனப்பெருக்கம் முழுவதும் குறைந்துவிடும். உழவியல் முறையில் நிலங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். காய்ந்த ஓலைகள், மட்டைகளை அப்புறப்படுத்த வேண்டும். நிலங்களை உழவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வேதியியல் முறையில் ஒரு லிட்டர் தண்ணீரில் டைகுளோர்வாஸ் இரண்டு மில்லி அல்லது மோனோகுரோட்டோபாஸ் இரண்டு மில்லி கலந்து அத்துடன் பூஞ்சான கொல்லி மருந்து காப்பர் ஆக்சி குளோரைடு, 2.5 கிராம் கரைத்து ஒட்டும் திரவத்துடன் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம்.
இந்த மருந்துகள் அனைத்தும் தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் விவரங்கள் அறிய விரும்புவோர் வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள் மற்றும் களப்பணியாளர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## "பயிர் கடனை ரத்து செய்ய வேண்டும்' தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை

சத்தியமங்கலம்: அரசு மற்றும் கூட்டுறவு வங்கிகளில் வாங்கி பயிர்கடனை ரத்து செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.
தமிழக விவசாயிகள் சங்கத்தின் அமைப்பு கூட்டம், சத்தியமங்கலத்தில் நடந்தது. சின்னசாமி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சத்தியமங்கலம் வட்டார செயலாளர் ஸ்டாலின் சிவக்குமார் வரவேற்றார். சங்கத்தின் நோக்கங்களை தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில துணை செயலாளர் துளசிமணி விளக்கினார். பவானிசாகர் எம்.எல்.ஏ., சுந்தரம் கோரிக்கை குறித்து பேசி◌ானர்.
அனைத்து விவசாயிகளுக்கும் மாதம், 3,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.
விவசாய துறைக்கென மத்திய, மாநில அரசுகள் தனி பட்ஜெட் அறிவிக்க வேண்டும். பயிர் காப்பீட்டை அனைத்து விவசாயிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.
அரசு மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடனை ரத்து செய்ய வேண்டும். புதிய பயிர்கடன்களை நிபந்தனையின்றி வழங்க வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றினர்.

## காலாவதியான விதை: உதவி இயக்குனர் எச்சரிக்கை

திருவண்ணாமலை: "திருவண்ணாமலை மாவட்டத்தில், காலாவதியான நெல், பயறு, மற்றும் சிறு தானியங்கள் விதைகளை விற்பனை செய்யக்கூடாது' என விதை சான்று உதவி இயக்குனர் பேபிவர்தம் எச்சரித்துள்ளார். அவர்

வெளியிட்டுள்ள அறிக்கை: அரசு வேளாண் விரிவாக்க மையங்கள், தனியார் விதை விற்பனை நிலையங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல், சிறுதானியங்கள், பயறு வகை ஆதாரம் மற்றும் சான்று நிலை விதைகள் காலாவதியாகிவிடும் நாட்களுக்குள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

விதைகள் காலாவதியாகிவிட்டால், அவற்றை எக்காரணம் கொண்டும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யக்கூடாது, காலாவதியானவிதைகளுக்கு முளைப்பு திறன், ஈரப்பதம் மற்றும் புறத்தூய்மை தகுதியான அளவு இருக்கிறதா என தெரிந்து கொண்டு, பிறகுதான் அவற்றை விற்பனை செய்ய வேண்டும், இதற்கான ஆய்வுக்கு திறனாய்வு என பெயர்.

உற்பத்தியாளர்கள் விதைகளை காலாவதியாவதற்குள் குவியல் விவரத்தை உரிய கட்டணத்தை விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் செலுத்தி அனுமதி பெற்றவுடன் விதை சான்று அலுவலரால் விதைக்குவியல் இருந்து விதை மாதிரி எடுத்து விதை சான்று உதவி இயக்குனர் மூலம் விதைப்பரிசோதணை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல பரிசோதனைகளில் தேர்ச்சி பெற்ற விதைக்குவியல்களுக்கு மட்டுமே மேலும் ஆறு மாத காலம் நீட்டிப்பு செய்து தரப்படும்.திறனாய்வு செய்ய விரும்பும் விதை உற்பத்தியாளர்கள், "விதை சான்று உதவி இயக்குனர் அலுவலகம், காந்திநகர் 6வது தெரு, திருவண்ணாமலை' என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை அணுக வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## துவரை சாகுபடி பயிற்சி

திண்டிவனம்:திண்டிவனம் அடுத்த எண்டியூர் கிராமத்தில் வேளாண் துறை சார்பில் நவீன துவரை சாகுபடி குறித்து பயிற்சி நடந்தது.வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண் இணை இயக்குனர் சக்ரவர்த்தி பயிற்சியளித்தார்.வேளாண்மை துணை இயக்குனர்கள் ரத்தினசபாபதி, ராஜேந்திரன், வேளாண்மை அறிவியல நிலைய தலைவர் டாக்டர் சாத்தையா, வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார், ராஜசேகர் கலந்து கொண்டனர்.

## கொய்யா சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

விழுப்புரம்:விழுப்புரம் அடுத்த பிடாகத்தில் அடர் நடவு முறையில் விவசாயிகள், கொய்யா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.சில ஆண்டுகளாக விவசாய நிலங்கள் தரிசாக மாறி வருவதை தடுக்கவும், அவைகளை உணவு உற்பத்திக்கு பயன்படுத்தவும் தோட்டக்கலை துறை மூலம் பல முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. அதன் படி மா, கொய்யா, பலா, முந்தரி உள்ளிட்ட பழச்செடிகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி, அதற்கான சொட்டு நீர் பாசனமும் அமைத்து கொடுக்கின்றன.இதனால் பழமரச் செடிகள் நடவு செய்ய, உழவு மட்டும் விவசாயிகள் செய்து கொடுத்தால் போதும் என்ற நிலை உள்ளது. பழமரச் செடிகள் மற்றும் அதற்கான உரங்களும் தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்படுகின்றன. இதனால் கொய்யா நடவு செய்து மூன்று ஆண்டுகள் வரை பராமரித்தால், 25 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பலன் கொடுக்கும்.இதனால் விழுப்புரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் கொய்யா சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அறுவடை செய்யப்படும் கொய்யாப் பழங்களை சிறு வியாபாரிகள் பலர் தோட்டத்திற்கே வந்து வாங்கிச் செல்வதால், விற்பனை பிரச்னையும் இல்லை.

## மானிய விலையில் இடு பொருட்கள் வழங்க விவசாயிகள் கோரிக்கை

பாப்பிரெட்டிப்பட்டி: மெணசி கால்நடை மருத்துவமனையில், அரசு வழங்கும் மானிய ஈடு பொருட்கள் முறையாக வழங்கப்படவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

மெணசி கால்நடை மருத்துவமனைக்கு, மெணசி, ஆலாபுரம், பூதநத்ம், குண்டல்மருவு, பாஞ்சாலிநகர், ஜீவா நகர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் அதிக எண்ணிக்கையில் வந்து செல்கின்றனர்.

இம்மருத்துவமனையில் அறிவழகன் என்பவர் கால்நடை மருத்துவராக பணிபுரிகிறார்.

மருத்துவமனையில், அரசு சார்பில் விவசாயிகளுக்கு, கால்நடை தீவனப்பொருட்கள், தீவன பயிர் உற்பத்தி விதைகள், தீவன பயிர் அறுவடை கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலை பொருட்கள் வழங்கிட வேண்டும்.

ஆனால், ஒரு சில விவசாயிகளுக்கு மட்டும் மானிய ஈடுபொருட்கள் வழங்குவதாக விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். குறிப்பாக மெணசி கிராமத்தை சேர்ந்தவர்களை தவிர மற்றவர்களுக்கு வழங்கப்படுவதில்லை என கூறப்படுகிறது. விதைகள் கேட்டு சென்றால், நீண்ட நாட்கள் அலைக்கழிக்கப்படுவதால்,

விவசாயிகள் வெறுப்படைந்து, வேறு இடங்களில் விதைகளை வாங்கும் நிலையுள்ளது. இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு விவசாயிகள் புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.

சிறு, குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் வழங்கும் மானிய விலை பொருட்களை அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க கால்நடை பராமரிப்பு துறை சார்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## நறுமண பொருட்கள் ஏற்றுமதியில் முன்னேற்றம்

கொச்சி:நடப்பு நிதியாண்டில் முதல் இருமாதங்களில், (ஏப்., - மே) நாட்டின் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, 1,750 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.மிளகாய் வற்றல்:இது, கடந்த நிதியாண்டின், இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை, (1,639 கோடி ரூபாய்)விட, 7 சதவீதம் அதிகம் என, நறுமணப் பொருட்கள் வாரியம் தெரிவித்துள்ளது.அதே சமயம், கணக்கீட்டு காலத்தில், அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 11 சதவீதம் குறைத்து, 1.35 லட்சம் டன்னில் இருந்து, 1.19 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.

நம் நாட்டிற்கு, பல்வேறு இனங்களில், கடும் போட்டி நாடாக உள்ள சீனாவில், மிளகாய் உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்நாடு, சர்வதேச சந்தைக்கு குறைந்த விலையில் மிளகாய் வற்றலை ஏற்றுமதி செய்து வருகிறது. இதனால் நம்நாட்டின் மிளகாய் வற்றலுக்கு, உலகநாடுகளில் தேவை குறைந்துள்ளது.

இதன் காரணமாகவே, நம் நாட்டின் நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.இதற்கு எடுத்துக்காட்டாக, கணக்கீட்டு காலத்தில், நாட்டின் மிளகாய் வற்றல் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 427

கோடி ரூபாயில் இருந்து, 359 கோடி ரூபாயாகவும், அளவின் அடிப்படையில், 55, 455 டன்னில் இருந்து 43,500 டன்னாகவும் சரிவடைந்துள்ளது.

சீரகம்:கணக்கீட்டு காலத்தில் புதினா ஏற்றுமதி அளவின் அடிப்படையில், 1,540 டன்னில் இருந்து, 200 டன்னாக சரிவடைந்துள்ளது. இருப்பினும் மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, அதிக மாற்றம் இன்றி, 306.91 கோடி ரூபாயாக (360.31 கோடி ரூபாய்) உள்ளது.சீரகம் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 15,111 டன்னிலிருந்து, 18,500 டன்னாகவும் இதன் மதிப்பு, 192 கோடி ரூபாயிலிருந்து, 238 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

ஏலக்காய்:மிளகு ஏற்றுமதியும், 2,426 டன்னிலிருந்து, 2,800 டன்னாகவும், 92.46 கோடி ரூபாயிலிருந்து, 114 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.அதே சமயம், மஞ்சள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 18,610 டன்னிலிருந்து 11,500 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 101 கோடி ரூபாயிலிருந்து, 96.67 கோடி ரூபாயாகவும் சரிவடைந்துள்ளது.ஏலக்காய் ஏற்றுமதி அளவின் அடிப்படையில், 165 டன்னிலிருந்து, 330 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 14.38 கோடி ரூபாயிலிருந்து, 26.64 கோடி ரூபாயாகவும், வளர்ச்சி கண்டுள்ளது என, நறுமணப்பொருட்கள் வாரியத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாசுமதி ஏற்றுமதியில் இந்தியா சாதனை படைக்கும்:கூடுதல் விலையில் ஈரான் கொள்முதல்

புதுடில்லி:நடப்பு நிதியாண்டில், இந்தியா, பாசுமதி ஏற்றுமதியில், புதிய சாதனை படைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.சர்வதேச அளவில் ஈரான் மீது வர்த்தக தடை விதிக்கப்பட்டு உள்ள நிலையிலும், அந்நாடு, அதிக விலை கொடுத்து, இந்திய பாசுமதி அரிசியை வாங்கி குவித்து வருகிறது.பயன்பாடு:"இதனால், சென்ற ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாதங்களில், இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, சென்ற ஆண்டின், இதே காலத்தை விட, 25 சதவீதம் அதிகரித்து, 15 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது' என, இந்திய அரிசி

ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஆர்.எஸ்.சேஷாத்ரி தெரிவித்தார்.

இந்த கணக்கின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில், பாசுமதி அரிசி ஏற்றுமதி, சென்ற நிதிஆண்டை விட, 10 சதவீதம் அதிகரித்து, 38 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.பிரியாணி, புலவு உள்ளிட்ட உணவு வகைகளை தயாரிக்க, பாசுமதி அரிசி பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச பாசுமதி அரிசி சந்தையில், இந்தியா, 65 சதவீத பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது.

வளைகுடா நாடுகள்:இந்தியாவில் இருந்து சவுதி அரேபியா, குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு, அதிக அளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதியாகிறது. இந்தியாவின் பாசுமதி அரிசியை இறக்குமதி செய்து கொள்வதில், சவுதி அரேபியா முதலிடத்திலும், ஈரான் இரண்டாவது இடத்திலும் உள்ளன. இவை தவிர, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்ரிக்க நாடுகளுக்கும், இந்தியாவில் இருந்து பாசுமதி அரிசி ஏற்றுமதியாகிறது.சுவைமிக்க, கம கமவென மணம் வீசும் இந்திய பாசுமதி அரிசி, ஈரானியர்களை வெகுவாக கவர்ந்து விட்டது. அதனால், இந்தியாவில் இருந்து ஈரானுக்கு, அதிக அளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதியாகி வருகிறது. ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில், ஈரானுக்கு மட்டும், 6.02 லட்சம் டன் பாசுமதி அரிசியை அனுப்ப, ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்துள்ளனர்.ஈரானில், பாசுமதி அரிசிக்கானதேவை அதிகரித்துள்ள நிலையில், கடந்த ஆண்டு, அதன் விலையும், 44 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால்,கே.ஆர்.பீ.எல்., எல்.டி.புட்ஸ்,கோகினூர் புட்ஸ்போன்ற, பாசுமதி அரிசி ஏற்றுமதி நிறுவனங்களின் வருவாய் அதிகரித்து வருகிறது.கடந்த, 2011-12ம் நிதியாண்டு, ஒரு டன் பாசுமதி அரிசியின் சராசரி ஏற்றுமதி விலை, 900 டாலராக இருந்தது. இது, சென்ற 2012-13ம் நிதியாண்டில், 1,300 டாலராக அதிகரித்தது.

கூடுதல் பரப்பளவு:நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் முதல் பாசுமதி அரிசியின் ஏற்றுமதி விலைமேலும் அதிகரித்து உள்ளது. குறிப்பாக, ஈரானுக்கு, ஒரு டன்

பாசுமதி அரிசி, சராசரியாக, 1,659 டாலர் என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.பாசுமதி அரிசி விலை அதிகரித்து வருவதால், இதர பயிர்களின்வேளாண்மையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் பார்வை, பாசுமதி பக்கம் திரும்பியுள்ளது.

ஏற்கனவே, பாசுமதி நெல் வகையை பயிரிட்டு வந்த விவசாயிகள், தற்போது கூடுதல் பரப்பளவில், அவற்றை பயிரிட்டு வருகின்றனர்."பாரம்பரிய பயிர்களை விட, பாசுமதி நெற்பயிரில் இரு மடங்கு வருவாய் கிடைப்பதால், இமயமலை அடிவாரத்தில் வசிக்கும் விவசாயிகள் பாசுமதி பயிரிடும் பரப்பளவை, அதிகரித்துள்ளனர்' என,சேஷாத்ரிமேலும் கூறினார்.மொத்தத்தில், ஈரானில் இந்திய பாசுமதி அரிசிக்கானதேவை பெருகி வருவதன் எதிரொலியாக, சர்வதேச சந்தையில் அதன் விலை உயர்ந்து வருகிறது.

இத்துடன், கடந்த ஆறு மாதங்களில், அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு, 16 சதவீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சி கண்டுள்ளதும், இந்திய பாசுமதி அரிசி ஏற்றுமதி நிறுவனங்களின் வருவாயை அதிகரிக்க வழி செய்து உள்ளது.மேற்கண்டவற்றால், பாசுமதி அரிசி ஏற்றுமதியில், இந்தியா சாதனை படைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.பரஸ்பர வர்த்தகம்:கடந்த 2011-12ம் நிதியாண்டில், இந்தியா-ஈரான் இடையே, 1,597கோடி டாலர் மதிப்பிலான பரஸ்பர வர்த்தகம்மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து, பாசுமதி அரிசியுடன்,தேயிலை, சர்க்கரை, உருக்கு மற்றும் ரசாயனங்களும் ஈரானுக்கு ஏற்றுமதியாகின்றன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.08.2013**

**காய்கறி விதை, நடவு செடிகள் மானியத்திற்கு ரூ.60லட்சம் ஒதுக்கீடு**

ஊட்டி: ஊட்டியில் நடந்த பாரம்பரிய பொ ருட்கள் விழிப்புணர்வு கருத்தரங்கில், தோட்டகலை துறை மற்றும் மலைப்பயிர் துறை ஆணையர் சத்யபிரதா சாகு பேசியதாவது: மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி தோட்டக்கலைத்துறையின் மூலமாக பல்வேறு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் காய்கறி விதைகள் மற்றும் நடவு செடிகள் 50 சதவீதம் மானியத்தில் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உயர் வி¬ ளச்சல் காய்கறி விதைகள், ஆயில் இன்ஜின்கள், கைத்தெளிப்பான்கள் 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யும் பொருட்டு ரூ.1 கோடியே 37 லட்சத்தில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெற உள்ளது. தேசிய தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயர் தொழில்நுட்ப பசுமைகுடில் அமைத்தல், மலர் நடவு செடிகள் மானியம், வெர்மி கம்போ ஸ்ட் யூனிட் அமைத்தில், இஞ்சி, குருமிளகு வகைகளில் பரப்பு அதிகரிப்பு போன்ற திட்டங்களுக்காக ரூ.3 கோடியே 65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான நுண்ணீர் பாசன திட்டத்தின கீழ் 100 சதவீதம் மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.48 லட்சம் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கொய்மலர் சாகுபடி கடந்த 10 ஆண்டுகளாக செய்யப்பட்டு வருவதால், விவசாயிகளின் கொய்மலர் நாற்று தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு ரூ.1 கோடியே 40 லட்சம் செல வில் தும்மனட்டி அரசு தோட்டக்கலை பண்¬ ணயில் தரமான கார்னேசன் நாற்று உற்பத்தி மைய பணிகள் துவங்கப்பட்டு விரைவில் நிறைவடையும் என்றார்.

**சம்பா சாகுபடி பணி தீவிரம் தேவையான உரம் இருப்பு வைத்து விநியோகம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உரக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜகான் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்சமயம் சம்பா சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உரக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.1163 டன் யூரியா, 2782 டன் டிஏபி, 1141 டன் பொட்டாஷ், 1239 டன் காம்ப்ளக்ஸ் ஆகிய உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் பயிருக்குத் தேவையான உரங்களை மட்டும் வாங்கி பயன்படுத்த வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு மேல் உரங்களை பயிருக்கு இடுவதை தவிர்த்து உர செலவை குறைக்கலாம். உர விற்பனை நிலையங்களில் உரங்களை மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் உரங்களை வாங்க வேண்டும். தவறாது உரத்திற்கான ரசீதினை கேட்டு வாங்கவேண்டும்.

உர விற்பனையை கண்காணிக்க, கண்காணிப்பு குழு, வேளாண்மை உதவி இயக்குநர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உர உரிமம் பெற்ற, 136 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கங்கள் மற்றும் 450 தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவை கண்காணிக்கப்பட்டு வருகின்றன. உரம் குறித்த சந்தேகங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம். உரங்கள் குறித்த புகார்களுக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண்ணை (0432 2221666) தொடர்புகொண்டு தெரிவிக்கலாம். இவ்வாறு ஷாஜகான் தெரிவித்துள்ளார்.

**தரமான விதை உற்பத்தியாளராக விவசாயிகளே மாற வேண்டும் இணை இயக்குனர் பேச்சு**

சின்னமனூர்: தரமான விதை உற்பத்தியாளர்களாக ஒவ்வொரு விவசாயியும் மாற வேண்டும் என சின்னமனூர் சின்னஓவுலாபுரத்தில் நடந்த விதைக்கிராமத் திட்ட பயிற்சி முகாமில் இணை இயக்குனர் பேசினார். சின்னமனூர் அருகே சின்னஓவுலாபுரத்தில் சின்னமனூர் வேளாண்மை துறை மூலம் நிலக்கடலை விதைக்கிராமத்திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி மற்றும் தரமான விதை உற்பத்தி குறித்த மூன்று கட்ட பயிற்சி முகாம் நடந்தது. முதல்கட்ட பயிற்சியினை தேனி வேளாண்மை துறை இணை இயக்குனர் சுந்தரம் தலைமை வகித்து துவக்கி வைத்தார். சின்னமனூர் ஊராட்சி ஒன்றியகுழு துணைத்தலைவர் பெரியமொக்கை முன்னிலை வகித்தார். சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குனர் அழகுநாகேந்திரன் வரவேற்றார்.விதை சான்று அலுவலர் ராஜகுரு, மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் பூங்கோதை ஆகியோர் பயிற்சி அளித்தனர். தேனி வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் பேசுகையில், ‘பருவ மழை பொய்த்து விட்டதால் தற்போது வறட்சி நிலவி வருகிறது. எப்போது மழை பெய்யும் என விவசாயிகள் காத்திருக்க வேண்டிய காலக்கட்டாயம் வந்து விட்டது. அதற்காக விவசாயத்தை விட்டு விட முடியாது. நிலத்தடியில் கிடைக்கின்ற தண்ணீரை கொண்டு சொட்டு நீர் பாசன முறையினை பின்பற்ற வேண்டும். சொட்டுநீர் பாசனமுறை விவசாயத்தை பெருக்கிட விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

தரமான விதை உற்பத்தியாளர்களாக விவசாயிகளே மாறிக் கொள்ள வேண்டும். உற்பத்தி செய்யப்படும் விதைகளை விதைப்பண்ணை மூலம் இரட்டிப்பு மடங்காக

உயர்த்திட வேண்டும். பின்னர் அவ்விதைகளை விவசாயிகள் வேளாண்மை துறை விற்பனையின் வாயிலாக வாங்கி உற்பத்தி திறனை பெருக்கிட வேண்டும். மாவட்ட அளவில் விவசாயிகளுக்கு ஏராளமான மானியங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை விவசாயிகள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் எண்ணெய் வித்து பயிர்களான ஆமணக்கு, நிலக்கடலை, எள் போன்றவைகளையும் அதிகமாக பயிரிட்டு உற்பத்தி திறனை பெருக்கிட வேண்டும்', என்றார். நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்தார். முகாமிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், பன்னீர்செல்வம், தமிழ்செல்வி, ஜானகிராமன், துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி ஆகியோர் செய்திருந்தனர். வேளாண்மை அலுவலர் இளம்பூரணர் நன்றி கூறினார். முகாமில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

## அறுவடைக்கு தயார் நிலையில் வெண்டைக்காய் ஏக்கருக்கு 4முதல் 6டன் வரை மகசூல் கிடைக்கும்

கரூர்: கரூர் மாவட்டத்தில் கரூர், அணைப்பாளையம், க.பரமத்தி, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், மாயனூர், பஞ்சப்பட்டி, தோகைமலை, குளித்தலை, பாலவிடுதி, மயிலம்பட்டி, கடவூர் ஆகிய 12இடங்களில் மழை அளவு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடங்களில் அளவிடப்படும் மழை அளவு கணக்கிடப்பட்டு மாவட்டம் முழுவதும் சராசரியாக பெய்யும் மழை கணக்கிடப்படுகிறது. குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்து வரும் மழையும் கரூர் மாவட்டத்தில் குறைந்த அளவே பதிவாகி வந்தது. கரூர் மாவட்டத்தில் பருவ மழைபொய்த்ததால் நெல், கரும்பு, வாழை, மற்றும் காய்கறி பயிர்கள் சாகுபடி பாதிக்கப்பட்டது. தற்போது மழை பெய்யாவிட்டாலும் கர்நாடக அணைகள் நிரம்பியதை தொடர்ந்து காவிரியில் தண்ணீர் வரத்து உள்ளது. கடந்த 1ம்தேதி முதல் நீர்வரத்து தொடர்ந்துள்ளது. ஒருகட்டத்தில் ஒருலட்சத்து 30ஆயிரம் கனஅடி வரை அதிகபட்சமாக காவிரியில் தண்ணீர் வந்தது. ஆனால் தற்போது திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைந்திருந்தாலும் நீர்வரத்து தொடர்ந்து இருக்கிறது. அதேபோல் அமராவதி அணையில் இருந்தும் தண்ணீர்

திறந்துவிடப்பட்டிருப்பதால் பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது.

இதனால் சாகுபடி பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். கரூர் வட்டாரத்தில் காவிரி மற்றும் அமராவதி பாசன பகுதிகளில் காய்கறி பயிர்கள் பரவலாக பயிரிடப்பட்டிருக்கிறது. கரூர் தாலுகாவில் வெண்டைக்காய் பஞ்சமாதேவி, வாங்கல், நெரூர், போன்ற பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். வெண்டைக்காய் சாகுபடி பருவம் ஜூன் முதல் ஆகஸ்டு வரை ஆகும். அதிகபட்சமாக 100 நாட்களில் வெண்டைக்காய் அறுவடை காலம் என்றாலும் 45வது நாளில் இருந்து ஒருநாள் விட்டு ஒருநாள் அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 4முதல் 6டன் வரை மகசூல் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது கரூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள இடங்களில் வெண்டைக்காய்கள் பூத்துக்குலுங்குகின்றன. உழவர்சந்தைகளில் வெண்டைக்காய் கிலோ ரூ.20க்கும், கடைகளில் ரூ.30க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இப்பகுதி தவிர வெள்ளியணை சுற்றுவட்டார பகுதிகளிலும் வெண்டைக்காய் அதிக அளவில் பயிரிடப்பட்டிருக்கிறது. உள்ளூர் விளைச்சல் அதிகமாக இருப்பதால் உழவர்சந்தைகளுக்கும், கடைகளுக்கும் விற்பனைக்காக அதிக அளவில் வெண்டைக்காய் வரத்து உள்ளது.

## நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில் ஏக்கருக்கு 80 டன் மகசூல் வேளாண் அதிகாரி தகவல்

திருச்சி: நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 80டன் வரை மகசூல் எடுக்கலாம் என வேளாண் இணை இயக்குனர் தெரிவித்தார். திருச்சி மாவட்டத்தில் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், மண்ணச்சநல்லூர், லால்குடி, புள்ளம்பாடி, துறையூர், உப்பிலியாபுரம், மணப் பாறை, வையம்பட்டி, மருங்காபுரி, லால்குடி, முசிறி, தொட்டியம், தா.பேட்டை ஆகிய பகுதிகளில் நடப்பாண்டு 13,750ஏக்கரில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இதுவரை 2,365 ஏக்கரில் கரும்பு சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. மண்ணச்ச நல்லூர் வட்டாரத்தில் மட்டும் 155 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும் பில் அதிக மகசூல் எடுக்க நீடித்த நிலையான சாகுபடி முறையை பின்பற்றி வரும் விவசாயிகளின் வயல்களை வேளாண் அதிகாரிகள் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளிடம் விவரம் கேட்டறிந்தனர்.

இதில் மண்ணச்சநல்லூர் கூடப்பள்ளி கிராமத்தில் நீடித்த நிலை யான முறையில் 12ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்து வரும் விவசாயி சுப்பையா என்பவரின் வயலை, திருச்சி வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் தலைமையில் துணை இயக்குனர் சந்திரசேகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாண்டியராஜன், மண்ணச்சநல்லூர் வேளாண் உதவி அலுவலர் ஜெயபாலன் ஆகியோர் பார்வையிட்டு விவரம் கேட்டறிந்தனர். பின்னர் வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் நிருபர்களிடம் கூறுகையில், கரும்பில் அதிக மகசூல் எடுக்க நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறை யாகும். இம்முறையில் சொட்டு நீர்பாசனம் மூலம் நீர் மற்றும் உரங்கள் அளித்தல் கரும்பு கரணைகளுக்கு பதிலாக 30நாள் வயதுடைய ஒரு பரு கரணை நாற்றுக்களை நடவு செய்தல் அறுவடை எளிதாக்க கரும்பு வெட்டும் இயந்திரம் பயன்படுத்த 5 அடி பார்களில் நடவு செய்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் கடைபிடிக்கப் பட்டு வருகிறது. இம்முறை மூலம் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 80டன் மகசூல் எளிதாக பெறலாம். திருச்சி மாவட்டத்தில் இம்முறையில் சாகுபடி செய்ய இவ்வாண்டு 1,125 ஏக்கர் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ரூ.10ஆயிரம் மானியம்

மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் இதுவரை 155 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 29 ஏக்கரில் இந்த கூடப்பள்ளி கிராமத்தில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இம்முறையில் சாகுபடி செய்யப்பட்டவர்களுக்கு சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் மற்றும் நீரில் கரையும் உரங்கள் ஏக்கருக்கு ரூ.10ஆயிரத்திற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய இப்பயிரின் வயது 3மாதம் ஆகும். இதில் ஏக்கருக்கு 85டன் வரை மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது என்று குருராஜ்சிங் தெரிவித்தார்.

**கிட்டங்கி வசதி இல்லாததால் ஆண்டுக்கு ரூ.44,000 கோடி உணவுப் பொருள் வீண்**

புதுடெல்லி : நாட்டில் போதிய சேமிப்பு கிட்டங்கி வசதி இல்லாததால் பழங்கள், தானியங்கள், காய்கறிகள் உள்பட யி44,000 கோடி மதிப்புக்கு உணவுப் பொருட்கள் ஆண்டுதோறும் வீணாகின்றன என்று மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை சரத் பவார் நேற்று மாநிலங்களவையில் தெரிவித்தார். மாநிலங்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது, சரத் பவார் கூறியதாவது: ஆண்டுதோறும் பழங்கள், காய்கறிகள் வீணாவது ரூ.13,309 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் வீணாவதையும் சேர்த்தால் மொத்தம் ரூ.44,000 கோடி மதிப்பு இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கூடுதல் கிட்டங்கி வசதியை ஏற்படுத்தும் நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. இது விஷயத்தில் சில மாநிலங்கள் மிகுந்த அக்கறை கொண்டு உதவுவதாக பவார் கூறினார். ஆனால், எந்த மாநிலங்கள் என்பதை குறிப்பிடவில்லை. கடந்த 2012ல் திட்ட கமிஷன் அமைத்த சமுத்திரா சவுத்ரி கமிட்டி அளித்த அறிக்கையில், நாட்டில் 6.13 கோடி டன் நிலக்கரி பற்றாக்குறை இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. தற்போது 2.90 கோடி டன் நிலக்கரி கிடைக்கிறது. தற்போதைய பற்றாக்குறை சுமார் 3.20 கோடி டன் என்ற அளவில்தான் உள்ளது. இவ்வாறு மத்திய அமைச் சர் சரத் பவார் தெரிவித் தார்.

**வியாபாரிகள் போட்டியால் அரசின் கோதுமை கொள்முதல் 33 சதவீதம் குறைந்தது**

புதுடெல்லி : இந்த ஆண்டு அரசு துறை நிறுவனங்கள் கோதுமை கொள்முதல் செய்வது 33 சதவீதம் குறையும். வியாபாரிகள் கொள்முதல் செய்வது அதிகரித்துள்ளதால், கடந்த ஆண்டு அரசு துறை நிறுவனங்கள் கொள்முதல் செய்த 3.80 கோடி டன்னிலிருந்து சுமார் 2.50 கோடி டன் வரையும் குறையும் என்று மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது, துணை கேள்விக்கு அமைச்சர் தாமஸ் பதிலளிக்கையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். 2013ம் ஆண்டு ஏப்ரல் துவக்கத்தில் இருந்து இதுவரையில் கோதுமை கொள்முதல் செய்ததில் கடந்த ஆண்டு இதே காலத்தில் கொள்முதல் செய்ததைவிட 33 சதவீதம் குறைவாக இருந்தது.

உணவுப் ªருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்தை கவனித்து வரும் இந்திய உணவு கார்ப்பரேஷன் (எப்சிஐ) கடந்த ஆண்டு மொத்தம் 37.35 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்தது. கோதுமை வர்த்தக ஆண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் வரையில். கொள்முதல் பணிகள் பொதுவாக ஜுனில் முடிவடையும்.

இந்த ஆண்டு விளைச்சல் நன்றாக உள்ளது. ஆனால், உணவுப் பொருளை வியாபாரிகள் அதிக அளவில் வாங்கியதால் எப்சிஐ கொள்முதல் கடந்த ஆண்டைக் காட்டிலும் 33 சதவீதம் குறைவானது. அரசு குறைந்தபட்ச ஆதரவு விலையான குவின்டால் யி1,350க்கு கொள்முதல் செய்தது. ஆனால், அதைவிட அதிக விலை கொடுத்து வியாபாரிகள் கொள்முதல் செய்துள்ளனர்.

எக்ஸ்ட்ரா தகவல்


இந்தியாவில் கடந்த 2011,12ம் ஆண்டில் (ஜுலை முதல் ஜுன் வரையில்) அதிகபட்ச சாதனையாக 104.32 கோடி டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. உலகில் உற்பத்தியாகும் அரிசியில் 20 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.08.2013**

**ரூபாய் மதிப்பு சரிந்ததால் முட்டை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பு ஆப்கானிஸ்தானுக்கு கோடிக்கணக்கில் முன்பதிவு**



நாமக்கல்

நாமக்கல் மண்டலத்தில் 1100–க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. இவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இந்தியாவில் ஆங்காங்கே அவ்வப்போது ஏற்படும் பறவை காய்ச்சல் நோய் காரணமாக வளைகுடா நாடுகளான துபாய், குவைத், கத்தார், தோக்கா, ஈரான் போன்ற நாடுகள் இந்திய முட்டைக்கு தடை விதித்தன. இதனால் கடந்த 10 ஆண்டுகளாக முட்டை ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. கடந்த 9 மாதங்களாக தடை விதித்து இருந்த ஓமன் நாடு சமீபத்தில் நாமக்கல்லில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஏற்றுமதி நிறுவனத்துக்கு மட்டும் முட்டை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்தது.

இந்த சூழ்நிலையில் ஆப்கானிஸ்தான் நாட்டில் குளிர்காலம் தொடங்கி உள்ளதால், அங்கு முட்டைக்கான தேவை அதிகரித்து உள்ளது. அதே நேரத்தில் தற்போது டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவடைந்து உள்ளதால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் முட்டைகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு கோடிக்கணக்கில் முட்டை ஏற்றுமதிக்கு ஆர்டர் கிடைத்து உள்ளதாக ஏற்றுமதியாளர் ஒருவர் கூறினார்.